# வடபகுதிக்கு கப்பலில் மண்ணெண்ணை வந்துசேர்ந்தது!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 76

யாழ்ப்பாணம் சித்திரை 16 ரபி:அவ் 3 வியாழக்கிழமை (29-4-71)

## கூப்பனுக்கு இனி சீனி அரை ருத்தல்

(நமது நிருபர் கு. வி. மகாலிங்கம்

யாழ்ப்பாணம், வியா

மண்ணெண்ணை, மற்றும் எரிபொருள் ஆகியன பருத்தித்துறையில் வந்திறங்கியுள்ளன.

'யூ-ரீம்' என்ற கப்பலில் வந்துள்ள இந்த 400 டிரம் கொண்ட 18,000 கலன் மண்ணெண்ணையை கஸ்டம்ஸ், பெட்ரோலியம் கூட்டுத்தாபனம், வீரவாகு இறக்குமதியாளர்கள் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து துரிதமாக இறக்குமதி செய்கின்றனர்.

அடுத்தமாதம் 5ந் திகதி 200 டிரம் கொண்ட 9,000 கலன் மண்ணெண்ணையும் மற்றும் எரிபொருளும் மற்றொரு கப்பலில் வந்திறங்கவிருக்கின்றன. தொடர்ந்து 15ம் திகதிதோறும் மாதமாகப் பலும் வரவிருக்கின்றது

### சீனிமூடைகள் வந்துள்ளன

சமான் வண்டிமூலம் சீனி மூடைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்திறங்கியுள்ளன. இந்தவாரம் ஒவ்வொரு கூப்பன் பங்கீட்டுக்கும் அரை ருத்தல் சீனி விநியோகிக்கப்படும்.

இத்தவலை, வடமாகாண அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகர என்னிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இறக்குமதி செய்யப்படும் மண்ணெண்ணை, மற்றும் எரிபொருள் ஆகியன முக்கியமாக விவசாயிகளின் தேவைகளுக்கு அந்தந்தப் பகுதி காரியாதிகாரி மூலம் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

### கடற்றொழிலாளருக்கு

கடற்றொழிலாளருக்கும் வேண்டியளவு மண்ணெண்ணையை வழங்க அந்தந்தப் பகுதி காரியாதிகாரிகளுக்கு அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

வெறுமையான டிரம் தேவைப்படுவோருக்கு மின்சாரப்பகுதியாரும் சீமெந்து தொழிற்சாலையும் விற்பனைக்கு கொடுக்க அரசாங்க அதிபர் ஏற்பாடு செய்துள்ளார்.

உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கு காரியாதிகாரி மூலமும் ஏனையோர் கூட்டுறவுசமாஜம் மூலமும் மண்ணெண்ணை மற்றும்

6-ம் பக்கம் பார்க்க

## சரணடைதற்கான ஒழுங்குகள்

# பயங்கரவாதிகளுக்கு விமானமூலம் பிரசுரம்!

## சிகரெட் கொடுக்க மறுத்தவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

கோட்டை, புதன்

சரணாகதியடையும் பயங்கரவாதிகளை ஏற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகள் இப்போது பூர்த்தியாகியுள்ளன. பயங்கரவாதிகள் கூடியிருக்கும் இடங்களில் ஒழுங்குகள் சம்பந்தமான துண்டுப்பிரசுரங்கள் விமானம் மூலம் வீசப்படும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அடிக்கடி இந்த ஒழுங்குகள் பற்றிஒலிபரப்பும். பத்திரிகைகளிலும் வெளியிடப்படும்.

சகல காரியாதிகாரிகளுக்கும், பொலிஸ் நிலையங்களுக்கும் அரசாங்க அதிபர்களுக்கும் இந்தத் துண்டுப் பிரசுரங்களை இன்று பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு அனுப்பிவைத்துள்ளது

மேலும் 5 மாவட்டங்களுக்கு ராணுவ இணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### மேலும் சரண்

கடந்த இருபத்திநான்கு மணி நேரத்தில் மேலும் பல பயங்கரவாதிகள் சரணடைந்திருக்கிறார்கள். பாதுகாப்புப் படையினரிடமிருந்து கிடைக்கும் செய்திகள் இதனைத் தெரிவிக்கின்றன.

குருநாகல் மாவட்டத்தில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் சிலர் பிரதமர் விடுத்த கோரிக்கையை ஏற்றுப் பொலிஸில் சரணடைந்துள்ளனர். ராஜாங்கனைப் பகுதியிலும் இதேபோன்று சில பயங்கரவாதிகள் சரணடைந்திருக்கிறார்கள்.

### பொதுமக்கள் உதவுகின்றனர்

பயங்கரவாதிகள் தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சு தகவல் கோரியிருந்ததைத் தொடர்ந்து பொதுமக்கள் அந்தரங்கமாகத் தெரிவித்த தகவல்களைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் பயங்கரவாதிகளின் இருப்பிடங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளனர். கைக்குண்டுகள் போன்றவற்றையும் கைப்பற்றியுள்ளனர். கம்பஹாவில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட 58 கைக்குண்டுகளையும், எறிகுண்டுகளையும் வெடிமருந்துகளையும், டைனமைட்டுகளையும் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

எல்பிட்டியா, தெனியாய பகுதிகளில் நிர்வாகம் சகஜநிலைக்குத் திரும்பியுள்ளது. பஸ் சேவையும் ஓரளவு சீரடைந்துவருகிறது. தெனியாயவில் மீண்டும் பொலிஸ் நிலையம் இயங்கத்தொடங்கியுள்ளது.

### காட்டுக்குள் ஒன்று சேர்ந்தனர்

எல்பிட்டியா, தெனியாய பகுதிகளில் 'கொட்டம்' அடித்துக் கொண்டிருந்த பயங்கரவாதிகள் சிங்கராஜ காட்டுக்குள் ஒரணியாகச் சேர்ந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கேகாலையைச் சேர்ந்த சிறு கடையொன்றின் உரிமையாளர் பயங்கரவாதிகளுக்குச் சிகரெட் கொடுக்க மறுத்ததைத் தொடர்ந்து அவர் சுடப்பட்டாராம். கடைக்கு முன்னால் நின்றுகொண்டு சிகரெட் தரும்படி கேட்டபோது, சிகரெட் இல்லையென்று சொன்னவுடன் துப்பாக்கி கே. டி. குணக என்ற அந்த அப்பாவி மனிதரைப் பதம் பார்த்தது

ராஜாங்கனையிலுள்ள பொலிஸ் நிலையமும், காணி அலுவலகம் ஒன்றும் பயங்கரவாதிகளால் தீக்கிரையாக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹொரவப் பொத்தானை என்ற இடத்தில் வேலை செய்யமுடியாத நிலை [illegible] இவர்களைப் பயங்கரவாதிகள் தடுத்துவருவதாகத் தெரிகிறது.

### அமைச்சர் குழு

பயங்கரவாதிகளினால் பறிக்கப்பட்ட பொது மக்களின் அவலநிலைபற்றி தெரிவிப்பதற்கு அமைச்சர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. சமூக சேவை அமைச்சர் திரு ரி. பி. தென்னக்கோன் விளையாட்டுத்துறை ஆட்சி மன்ற விவகார அமைச்சர் திரு கே. பி. ரத்நாயக்க, கலாச்சார அமைச்சர் எம். எஸ் குலதிலக்கா ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். ஆட்சிமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் பற்றி இக்குழுவிடம் முறையிடுவர்.

---

அமைச்சர்களை சந்திக்க

## மேயர் துரையப்பா கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாண நகரத்தின் அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக மந்திரிகளை நேரில் சந்திப்பதற்காக யாழ் மேயர் திரு ஏ. ரி. துரையப்பா கொழும்பு சென்றுள்ளார்.

வரி குறைப்பது பற்றியும் அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்துவார் எனத் தெரியவருகிறது.

மேயர் திரும்பியதும் யாழ்ப்பாணத்தில் சில முக்கிய வேலைகள் இடம்பெற விருப்பதாக [illegible] உறுப்பினரான திரு. [illegible] எஸ். நடராசா தெரிவித்தார்.

## கீரிமலையில் மரணமான இவர் யார்?

காங்கேசன்துறை, வியா.

கீரிமலையில் நேற்று முன்தினம் மரணமானவர் எனக் கருதப்படும் ஒருவரின் சடலம் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிப்பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது

இதுவரை உரிமைகோரப்படாதிருக்கும் இச்சடலம் அடையாளம் காணப்படுவதற்காக இங்கு வைக்கப்பட்டுள்ளது.

மரணமானவருக்கு சுமார் 60 வயதிருக்கும் தலையில் இலேசாக வழுக்கை விழுந்திருக்கிறது.

இச்சடலம் அடையாளம் கண்டு உரிமை கோரப்படுவதற்காக இன்று பிற்பகல் 4 மணிவரை பிரஸ்தாப பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கும். யாரும் உரிமைகோராத பட்சத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்குப் பின் இச்சடலம் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்படும்.

சடலத்தைக் காங்கேசன்துறைப் பொலிஸார் படம் பிடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்தகவல்களை காங்கேசன்துறைப் பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. உ. குமரகுரு தெரிவித்தார்.

## நீண்ட தூர பஸ் சேவைகள் ஆரம்பம்

கோட்டை, புதன்

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீண்ட தூர பஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்ட நேரத்திற்கமைய அனுராதபுரத்திற்கூடாகச் செல்லும் யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்-திருகோணமலை, யாழ்ப்பாணம்-மாத்தளை பஸ் சேவைகள் ஆரம்பமாகியுள்ளன

**ஊரடங்கு நேரம்**

இன்று மாலை
6-30
மணி முதல்
நாளை காலை
5-30
மணி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ. நா தலையிட வற்புறுத்து

யாழ்ப்பாணம், வியா. கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் இரத்த களரிக்கு முற்றுப்புள்ளி வைக்க ஐ நா சபை உடனடியாகத் தலையிட வற்புறுத்துமாறு யாழ்ப்பாண பொதுஜன ஐக்கிய முன்னணி... சபை பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைக் கோரியுள்ளது.

......

## கொழும்பு - யாழ். தபால் சேவை

குருநகர், புதன்

யாழ்ப்பாணம் கொழும்பு சாதாரண தபால் சேவைகள் மீண்டும் வழமைபோல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களாக கொழும்பு - யாழ்ப்பாணம் தபால் சேவை விமானமூலம் நடைபெற்றுவந்தது. நேற்றிலிருந்து இச்சேவைகள் வழமைபோல் நடைபெறத் தொடங்கியுள்ளன.

......

## மானிப்பாய் அந்தோனியார் கோவில்

தாவடி, புதன்

மானிப்பாய் புனித அந்தோனியார் கோவில் கட்டிடப் புனருத்தாரண வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

......

அரியாலை, செவ்.

நல்லூர்க் கைலாசபிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகிறது

## துப்பாக்கிகள் ஒப்படைப்பு

முல்லைத்தீவு, புதன்

வவுனியா அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீராவின் உத்தரவைத் தொடர்ந்து காரியாதிகாரிகள் தங்கள் தங்கள் பகுதிகளிலிருந்த துப்பாக்கிகளைச் சேகரித்து அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்துள்ளனர்.

......

## பல்லக்கு உற்சவம்

அரியாலை, செவ்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் வருகிற முதலாம் திகதி பல்லக்கு உற்சவம் நடைபெறுகிறது. பல இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.— —

## இடமாற்றம்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவுப் பகுதி வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. டபிள்யூ ஆர். அருளையா கண்டிப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

......

## உற்சவம்

வல்வெட்டித்துறை, செவ்

வல்லை அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 26ந்திகதி ஆரம்பமாகியது. தொடர்ந்து இத்வாரங்கள் திருவிழா நடைபெறும்.

——

தாவடி, புதன்

கொக்குவில் கிழக்கு மாத்தனை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத்தின் புதிய தேருக்கான வேலைகள் நடைபெற்றுவருகின்றன. வெகுவிரைவில் புதிய தேர் பூர்த்தியாகும் எனத் தெரிகிறது.


**நாகம்ஸ் சினிமா**
கன்னாகம்
காலை 10-30,
Audi Murphy
in
BULLET FOR A BAD MaN
பி.ப 2-00
ஆனந்தன் - கே ஆர் விஜயா
நடித்த
**தாய்மேல் ஆணை**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 9-30, 1-30
சிவாஜி - K. R. விஜயா
நடித்த
**தங்கை**

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 10 00, 1-30 மட்டும்
ஏ வி எம். ராஜன் — சாரதா
நடித்த
**துலாபாரம்**

**றீகல்** யாழ்ப்பாணம்
தினசரி காலை 9-30
பி ப. 1-00 மணி
சிவாஜி - சௌகார்ஜானகி
நடித்த
**படிக்காத மேதை**
(புதிய கொப்பி)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
காலை 10-00 பி. ப 1-15
ஷம்மிகபூர் - பபிட்டா
நடித்த
**தும்சே அச்சா கோன் ஹை**
(ஹிந்தி - கலர்)


## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

சமீபத்தில் நடைபெற்ற கொக்குவில் மேற்கு சைவ வாலிபர் சங்கத்தின் கூட்டமொன்றில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. இராசகுலேந்திரன், உபதலைவர்: திரு. க. சிற்றம்பலம், காரியதரிசி: திரு. க. தாமரராசா, உபகாரியதரிசி: திரு. க. கமலேஸ்வரன், தனாதிகாரி: திரு. க. சிவசுந்தரம், உபதனாதிகாரி: திரு. வை. சந்திரசேகரம், பரிசோதகர்: திரு. ந ஸ்ரீபாலன், பத்திராதிபர்: திரு. வெ. இராசேந்திரன்.

6 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

— —

பருத்தித்துறை, புதன்

நெல்லியடிப் பட்டின சபைக்குட்பட்ட இடைக்குறிச்சிப் பகுதியில் வாழும் சிறுபான்மைத்தமிழருக்காக 5-ம் வட்டார உறுப்பினர் திரு, ந கனகசுந்தரம் ஒரு பொதுமலசல கூடம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அநேகமாக மூன்று மாத காலத்தில் இது அமைக்கப்பட்டுவிடுமெனத் தெரிகிறது.


**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME

தினசரி பி. ப. 1-45
சிவாஜி — ஜெய்சங்கர்
சரோஜாதேவி
நடித்த
**அன்பளிப்பு**


தீவுப்பகுதி

## காரியாதிகாரி ஏற்பாடு

குருநகர் புதன்

தீவுப்பகுதி காரியாதிகாரி அலுவலகத்தில் சென்ற இரு வாரகாலமாக கொடுக்கப்பட்டுவந்த மண்ணெண்ணைக்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக அனுமதிகளை அவ்வப்பகுதி கிராமசேவகர்களிடம் பெறுவதற்கும் அந்த அனுமதியுடன் அதே கிராமத்திலுள்ள கூட்டுறவுக் கடைகளில் எண்ணெய் பெறுவதற்குமான ஒழுங்குகளையும் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு எஸ். நடராசா மேற்கொண்டுள்ளார். விவசாயிகளுக்கான பெற்றோல் ஒயில் ஆகியவைகளுக்கு மட்டும் தற்பொழுது காரியாதிகாரியால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

......

## மே 18-ம் திகதி விசாரணை

யாழ்ப்பாணம், வியா.

தச்சன்தோப்பு கொலை முயற்சி வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சண்ட் தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதியரசர் விசாரணையை மே மாதம் 18-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். அசைஸ் விசாரணை இன்று காலை நடைபெறும்


**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப.1-30
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி
காலை 10-00
பி. ப 1-15
மாஸ்டர் பிரபாகர்
பேபி சுமதி - லெட்சுமி
நடித்த
**வா ராஜா வா**

6-வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30 பி.ப.1-30
எம். ஜி. ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
**எங்க வீட்டுப்பிள்ளை**

அடுத்த வெளியீடு
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
மனோகர், அசோகன், ஆனந்தன்
நாகேஷ், சுந்தரராஜன்
நடித்த
விநாயகா பிக்சர்ஸ்
**மூன்றெழுத்து**
(மர்மசித்திரம்)



**எரிச்சலா?**

சில நாட்களாக, சுகக் குறைவா ? களைப்பால் எழுச்சியின்றி, செய்யும் வேலையில் சிரத்தையற்று குழம்புகிறீர்களா ? டியுரோல் அருந்துக. விட்டமின் பீ. கொம்பிளக்ஸும், இரும்புச்சத்தும் உட்கொண்ட அருமையான செரிப்பழ ருசியுடைய டியுரோல் தன் உள்ளடங்கிய முழுமையான உணவுப் பலத்தால் சக்தி அதிகரிக்கச் செய்து உங்களுக்கு புதுப்பலமளிக்கும் ; வாழ்க்கையில் சிறப்புத்தோன்றும். டியுரோல் இரத்த புஷ்டியை ஊக்குவிக்கும் ; உணவில் மெய் விருப்பு உண்டுபண்ணி, தளர்ந்த நரம்புகளுக்கு மறுமலர்ச்சியளிக்கவென விசேஷமாக மருத்துவ ரீதியில் தயாரான டானிக். சோர்விலிருந்து உங்களைத் தட்டியெழுப்பி புத்துயிர் அளிக்க வல்லது. ஓர் டியுமெக்ஸ் தயாரிப்பு.




டியுரோல் அருந்தி புத்துயிர் பெறுக

GRANT 54 83 70


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவில் சீனுவின் செல்வாக்கை அமெரிக்கா மறுக்கவில்லையாம்

## யு.எஸ். ராஜாங்க அமைச்சர் சொல்கிறுர்

லண்டன், ஏப் 28

ஆசியாவில் மக்கள்சீனுவின் செல்வாக்கும் பங்கும் அதிகரித்துவருகிறது. இதை உடுப்படியான முறையில் ஆக்கபூர்வமான வழியில் அது செயல்படுத்தவேண்டுமென்பதே அமெரிக்காவின் கொள்கையே தவிர, சீன செல்வாக்கு பற்றிய உண்மையை மறுப்பதல்ல என்று அமெரிக்க ராஜாங்கஅமைச்சர் திரு. வில்லியம் ரோஜஸ் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடைபெறும் தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகள் மகாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்திருக்கும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர், சீனுவுக்கும் அமெரிக்காவிற்குமிடையே இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தொடர்பு பற்றிக் குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு சீன டேபிள்டெனிஸ் கோஷ்டி விஜயம்செய்யவிருப்பது அமெரிக்காவிற்கும் சீனுவிற்குமிடையே ஏற்படக்கூடிய புதிய உறவின் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். ஆசியமக்கள் தங்களிடையே ஏற்பட்டிருக்கும் பிரச்னைகளைத் தீர்க்க ஒன்றுக இணைந்து செயல்படவேண்டும் என்று அவர் கூறிஞர்.

சீட்டோ ஒப்பந்த நாடுகளுக்கு பிரிட்டன் தொடர்ந்து ஆதரவு அளித்துவருமென பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத் உறுதியளித்தார்.

## துருக்கியில் இராணுவச் சட்டம் அமுல்

அங்காரா, ஏப். 28

துருக்கியில் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக 30 நாள் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தலைநகர் அங்கரா உட்பட 11 மாநிலங்களில் இது அமுல் செய்யப்படும்.

தீவிரவாத மாணவர் இயக்கங்கள் சட்டவிரோதமாக்கப்பட்டிருக்கின்றன. பொதுக்கூட்டங்களுக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துருக்கிக்கு அமெரிக்க ராஜங்க அமைச்சர் திரு. வியாட் ரோஜஸ் விஜயம் செய்யவிருப்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை

## பிரிட்டன் மௌனத்துக்கு தொழிற் கட்சித் தலைவர் கண்டனம்

லண்டன், ஏப். 28

கிழக்கு வங்காளத்தில் நடைபெறும் இனக்கொலையைத் தடுக்க முயலாமல் பிரிட்டன் மௌனமாக இருப்பது வேடிக்கையாக இருக்கிறதென பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

லண்டனிலிருந்து வெளிவரும் டெயிலிமிரர் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் வியட்னமில் நடைபெறும் சண்டைக்காக லண்டனில் இருக்கும் அமெரிக்கத் தூதரகம் மீது சல்லிச்சு நடத்துபவர்கள் இப்பொழுது எங்குபோய் விட்டார்கள். வியட்னமில் நடக்கும் கொலைகளைவிட பயங்கரமான படுகொலைகளை கிழக்கு வங்காளத்தில் மேற்குப் பாகிஸ்தானியர் நடத்தவும் அதுபற்றி உலகம் ஒன்றும் பேசாதிருக்கிறது.

மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை சிறைவைத்தும் மக்களைப் படுகொலை செய்தும் சர்வதேசப் பார்வையாளர்களை அனுமதியாமலும் யாஹ்யாகான் ஆட்சி நடத்து வருகிறது.

ஹிட்லரின் ஆட்சிக்காலத்தில் நடந்த இனக்கொலைக்குப்பின் சரித்திரத்தில் திடுக்கிடத்தக்க வகையில் கிழக்கு வங்காளத்தில் படுகொலைகள் நடந்து வருகிறதென்றுர்.

பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும்

## தூதரக அதிகாரிகளை விடுவிக்க இந்தியா முயற்சி

புதுடில்லி, ஏப். 28

டாக்காவிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தைச் சேர்ந்த உதவித்தூதுவரையும், தூதராக அதிகாரிகளையும் அநேகமாக பாகிஸ்தான் அரசு வீட்டுக்காவலில் வைத்திருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாகவே தூதரகம் மூடப்பட்டு அதிகாரிகள் இந்தியாவுக்குப் புறப்பட ஆயத்தமாகும் பொழுது அவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவர்களை விடுவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்தியா தீவிரமாக எடுத்துவருகிறது.

இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் திரு. ஹைதரை இந்திய வெளிவிவகார அமைச்சின் காரியதரிசி திரு. ரேய் அழைத்து இது சம்பந்தமான இந்திய அரசின் கருத்தைத் தெரிவித்ததாகவும், இஸ்லாமாபாத்திலுள்ள பாகிஸ்தான் அரசினர் முன்பு இந்தியாவுக்கு அளித்த உறுதி மொழிகளுக்கு இச்செயல் முரண்பாடாக இருப்பதாகத் தெரிவித்ததாகவும் சொல்லப்படுகிறது.

வெளிவிவகாரக் காரியதரிசி திரு. ரேயிடம் பாகிஸ்தான் தூதுவர் திரு ஹைதர் பாகிஸ்தான் அரசின் குறிப்பொன்றை அளித்ததாகவும் சொல்லப்படுகிறது. அதில் உள்ள விஷயங்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பாகிஸ்தான் ஆட்சியினரின் மிக மேல் மட்டத்தில் இருக்கும் கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த அதிகாரிகளை மிகவும் பாதுகாப்புடன் மேற்குப் பாகிஸ்தானியர் வைத்திருப்பதாகவும் அநேகமாக அவர்கள் மேற்குப் பாகிஸ்தானிலேயே வைக்கப்பட்டிருக்கின்றனர் என இந்திய வானொலி தெரிவித்துள்ளது.

### யூதாண்ட் ஆலோசனை

கிழக்கு வங்காள அகதிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கு ஐ. நா. முன்வரவேண்டுமென பாரதம் விடுத்த கோரிக்கை பற்றி உறுப்பு நாடுகளுடனும் ஸ்தாபனங்களுடனும் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் பெனி நகரில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

திரு. யுதாண்ட் பல்வேறு அமைப்புகளுடனும், உலக உணவுத்திட்ட நிறுவனம், உலக சுகாதார ஸ்தாபனம் ஐ. நாவிலுள்ள இந்தியத் தூதுவர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்திஞர்.

தற்பொழுது நிதிநிலைமை மோசமாக இருப்பதினுல் இதற்கென நிதிதிரட்டப்படலாமென ஐ நா பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### அமெரிக்கா விருப்பம்

கிழக்கு வங்க மக்களுக்கு அமெரிக்கா உதவி அளிக்க விரும்புவதாகவும், டாக்காவிலுள்ள அமெரிக்கத் தூதுவராகத்திலுள்ள உணவு வகைகளை கிழக்கு வங்க அகதிகளுக்கு அளிப்பதற்கு அனுமதி அளிக்குமாறு பாகிஸ்தானை கேட்ட பொழுது பாகிஸ்தான் அரசு அதற்கு அனுமதிவழங்க மறுத்துவிட்டதாக அமெரிக்க ராஜாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### ஹியூம், ரோஜஸ் பேச்சுவார்த்தை

தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகள் மகாநாட்டில் கலந்துகொள்ள லண்டனுக்கு வருகை புரிந்திருக்கும் அமெரிக்க ராஜாங்கஅமைச்சர் திரு ரோஜஸ், பிரிட்டிஷ் அமைச்சர் திரு. டக்ளஸ் ஹியூமுடன் கிழக்கு வங்காளம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்திய அரசுடன் ஆலோசனை நடத்துவதற்காக, பாகிஸ்தானிலுள்ள இந்தியத் தூதுவர் ஸ்ரீ ஆச்சாரியா புதுடில்லி வந்துள்ளார். இவர் நேற்று பாகிஸ்தான் செல்லவிருந்தார். ஆனுல் கடைசி நேரத்தில் தனது விஜயத்தை ஒத்திவைத்துள்ளார்.

இதற்கிடையே பாகிஸ்தானியத் துருப்புக்கள் எல்லையோரமுள்ள இரு இந்தியப்பகுதிகள் மீது இயந்திரத்துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

முதல்முறை ... லைக்கிராமமான ... மீதும், இரண்டாவதுமுறை மூந்நூறு யார்களுக்கப்பாலுள்ள இன்னேர் கிராமம் மீதும் பாகிஸ்தானியத் துருப்புக்கள் துப்பாக்கி பிரயோகம் நடத்தினராம்.

அதேநேரத்தில், ஊடுருவல் செய்த 300 இந்தியர்களை பாகிஸ்தான் துருப்புக்கள் கைதுசெய்துள்ளதாக ... தெரிவிக்கிறது.

## வற்றுப்பளை கண்ணகை அம்மன் திருவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

நாளை ஏழாலை மதிதுவரைக்கலட்டி வற்றுப்பளை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகின்றது.

இவ்விழா தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறும். விநாயகப் பெருமான் மூஷிகவாகனத்திலும் முருகப்பெருமான வள்ளி தெய்வயானை சமேதராய் மயூரவாகனத்திலும் திருவுலாவரும் காட்சி இடம்பெறும். இரவுத் திருவிழாக்களும் மாலை 6 மணிக்கு முன்னர் முடிவடையக்கூடியதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## நிதிஅமைச்சர் பாரிஸ் சென்றுர்

கோட்டை, புதன்

நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா நேற்று பாரிசுக்குப் பயணமானுர். பாரிசில் நடைபெறும் நிதி உதவி மகாநாட்டில் கலந்துகொள்ளுமுகமாக அவர் அங்கு விஜயம் செய்துள்ளார் பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலிருந்து நிதிஅமைச்சர் நேற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

திட்டமிடல்வேலைவாய்ப்பு அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. எச் ஏ. டி. எஸ். குணசேகரா திரு: கொப்பகொட ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு ஏற்கெனவே பாரிஸ் சென்றுள்ளனர்.

டாக்டர் பெரேரா நாடு திரும்பும்வரை திரு. பெர்ஞட் சொய்சா பதில் நிதி அமைச்சராகக் கடமையாற்றுவார்.

## மேயருக்கு பாராட்டு

அரியாலை, புதன்

யாழ். நகரின் புதிய மேயராக தெரிவுசெய்யப்பட்ட திரு. ஏ. ரி. துரையப்பாவுக்கு அரியாலைமுன்னேற்றக் கழகம், நல்லூர் வாலிபர் முன்னேற்றசங்கம், இலங்கை இந்து சமயப் பிரசாரசபை ஆகியன தமது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளன.

## தபால்மா அதிபர் சுற்றுநிருபம்

குருநகர், புதன்

தபால்மூலம் அனுப்பப்படும் எந்தவி பார்சல்களையும் பெறக்கூடாதென்ற சுற்றுநிருபமொன்று தபால்மா அதிகாரியால் நாட்டில் சகல தபால் அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக தபால பகுதி அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

## 'வியாபாரிகளே பதுக்காதீர்'

குருநகர், புதன்

தேசிய நெருக்கடி ஏற்பட்டுள்ள இவ்வேலையில் சிறுவ்பதிதிற்காக பங்கீடு செய்யவேண்டிய அத்தியாவசிய பொருட்களை பதுக்கி வைக்காதீர்கள். இவ்வாறு கூறும் சுவரொட்டிகளை மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம் மேற்படி கிராமத்தின் பொதுநிலையங்களின் முன்னர் ஒட்டியுள்ளது.

## 'இளைஞர்களுக்கு ஆத்மீக சிந்தனை வேண்டும்'

புங்குடுதீவு, புதன்

"இளைஞர்கள் ஆத்மீக துறையில் அதிக நாட்டம் உள்ளவர்களாக திகழவேண்டும். எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்து மனமகிழ்வோடு அமைதியாக வாழவேண்டும் இதற்கு நமது சிந்தனைகள் ஆத்மீக நாட்டம் உடையனவாய் இருத்தல்வேண்டும்"

புங்குடுதீவு பெருங்காடு இளைஞர்களால் அமைக்கப்பட்ட தமிழ்த்தாய் மன்றத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய ஈழத்துச் சிவானந்தன் மேற்கண்டவாறு கூறிஞர்

திரு. சோ. செல்வரத்தினத்தின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. த தம்பிப்பிள்ளை, திரு. க. கணேசலிங்கம் ஆகியோரும் பேசினர்

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியா

தச்சன் தோப்பு கொலை முயற்சிவழக்குநேற்றுக்காலை வடபகுதி அசைஸ்கோர்ட்டின் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசர் விசாரணையை இன்று காலைவரை ஒத்திவைத்தார்.

## 'பனம்பொருள் உற்பத்தி நிலையம் வேண்டும்'

அரியாலை, புதன்

'அரியாலையில் பனம்பொருள் ஆராய்ச்சி நிலயத்தை நிறுவுவதினுல் நன்மை ஏற்படலாம் ஆராய்ச்சி நிலயத்திற்கு வேண்டிய வசதிகள் இப்பகுதியில் உண்டு' என்று கூறும் தீர்மானம் அரியாலை முன்னேற்ற மன்றத்தினுல் நிறைவேற்றப்பட்டது.

புதிய அசல் (ரோஜாவர்ணம்)
வின்சென்ட்ஸ்
ஏ.எஸ்.சீ. வில்லைகள்
தலைவலி, தடிமல், சளிச்சுரம் மற்றும் எல்லாவித உபாதைகளுக்கும் நிவாரணி
யாவரும் இப்பொழுது நாடுவது வின்சென்ட்ஸ் ஏ. எஸ். சீ. வில்லைகளையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளரைக் கட்டுப்படுத்த புதிய ஒழுங்கு விதிகள்

கோட்டை, புதன்

கடந்த புதன் கிழமை தொழில் அமைச்சர் திரு. எம் பீ டீ எஸ் சிறிவர்த்தன சம்பளசபைச் சட்டம், 6ம் விதியின்கீழ் இயற்றப்பட்ட புதிய சட்டவிதிகளை ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்தார் அதில் கூறப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளை மீறி நடக்கும் எந்தவொரு ஊழியருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அதில் இடங்கொடுக்கப்பட்டுள்ளது.

இவை ஏற்கனவே ஆட்சி மன்றத்திலும், செனெற்றிலும் விவாதிக்கப்பட்டபின் சட்டமாக்கப்பட்டவை யாகும். இச்சட்ட விதிகளின் கீழ் குற்றம் எனக் காணப்படும் சில விதிகள் பற்றிய விபரம் வருமாறு:

0 மாதச் சம்பள ஊழியர் தகுந்த காரணம் காட்டாமல் வேலைக்கு வராதிருத்தல்.

0 தகுந்த காரணமின்றி வேலைக்குப் பிந்திவருதல்.

0 முதலாளிக்குச் சொந்தமான சொத்துக்களை தொலைத்தல் அல்லதுநாசஞ் செய்தல். இதற்குத் தொழிலாளி நேரடியாக பொறுப்பாயிருந்தால், அல்லது கவலையீனமாக அல்லது வேண்டுமென்றே செய்திருந்தால் மட்டும்.

0 கடமையில் தவறு வது அல்லது கவலையீனமாயிருத்தல்.

0 கடமை நேரத்தில் நித்திரை செய்தல்.

கடமை சம்பந்தப்பட்ட மட்டில், சட்டரீதியாக க் கொடுக்கப்பட்ட உத்தரவு களைத் தொழிலாளி நிறைவேற்றமல் விடுதல்.

0 முதலாளியின் பொருள்களைக் களவாடல், நம்பிக்கைத்துரோகம் செய்தல், அல்லது அவரது வர்த்தகத்துக்குக் கேடுவிளைவித்தல்

0 வேலை நேரத்தில் மது போதையில் இருத்தல்.

0 வேண்டுமென்றே கீழ்ப்படியாது, ஒழுக்க விதிகளை மீறுதல்.

0 அலுவல் காரணமாக முதலாளியின் ஸ்தாபனத்துக்கு வருகைதரும் பொது மக்களிடம் மரியாதைக் குறைவாக நடத்தல் அல்லது அவர்களுக்கு இடைஞ்சல் விளைவித்தல்.

0 பொய்யான அல்லது தவறுன அறிக்கை விடுத்தல்.

0 துர்ப்பிரசாரம் செய்தல்.

0 தொழில் ஸ்தாபனத்தில் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்புச் சாதனங்களைச் சேதப்படுத்தல்.

0 தொழில் ஸ்தாபனத்தில் விதிக்கப்பட்டுள்ள சுகாதார விதிகளை மீறுதல்.

0 தடை விதிக்கப்பட்ட பகுதிகளில் புகை பிடித்தல்.

துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள், கைநூல்கள் போன்றவற்றை தொழில் ஸ்தாபன உரிமையாளரின் அனுமதியின்றி தொழில் ஸ்தாபனத்துள் விநியோகிப்பது சட்டவிரோத செயலாகும் என்றும் அந்த விதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்று தற்கொலை

குருநகர், புதன்

ஒரு வாரத்தில் மூன்று தற்கொலை நிகழ்ச்சிகள் அனலைதீவுக் கிராமத்தில் நடந்துள்ளன. தற்கொலைக்குள்ளானமூவரும்கிருமிநாசினியை அருந்தியுள்ளதாக விசாரணையில் தெரியவந்தது.

திருமதி நா சுப்பிரமணியம், செல்வி எஸ் குமாரசாமி, செல்வி கே இராமலிங்கம் ஆகிய மூவருள் இருவர் இளம் யுவதிகள். அனலைதீவு மரணவிசாரணை அதிகாரி கே சிவனடியான விசாரணை நடத்தினர்.

## இளைஞர்கழக ஆதரவு

தாவடி, புதன்

யாழ்ப்பாண இளைஞர்கள் மக்கள் அரசாங்கத்தின் முற்போக்கான கொள்கைகளுக்கு மிக்க ஆதரவு நல்கி வருகிருர்கள் என யாழ் இளைஞர்கழக கூட்டத்தில் சுகாதார பரிசோதகர் திரு நா. செல்லப்பா பாராட்டினர்.

இக் கூட்டத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிராக எடுக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளுக்கும் ஆதரவு கொடுப்பதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது

மேலும் பதுக்கல்பேர்வழிகளைக் கண்டுபிடித்துபொலிசாருக்கு அறிவிப்பதெனவும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கத்துக்கும் தெரிவிப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு என் ஆர். இரத்தினகோபால், திரு. ப. ஜெயபதி, திரு. இராமலிங்கம் ஆகியோரும் இக் கூட்டத்தில் பேசினர்.

## தொல்புரம் வெற்றி

மாவிட்டபுரம், புதன்

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்துக்கும் சங்கானை மேற்கு சனசமூக நிலையத்துக்கும் இடையில் நடந்த கரபந்தாட்டப் போட்டியில் தொல்புரம் மத்திய சனசமூகநிலையம் வெற்றி பெற்றது.

## பருளாய் வெற்றி

சுழிபுரம், புதன்

பருளாய்விளையாட்டுக்கழக கோஷ்டிக்கும், தொல்புரம் அம்பாள் கழக கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற மென்பந்து தடுப்பாட்டப் போட்டியில் பருளை விளையாட்டுக் கழகத்தினர் இன்னிங்சாலும் 47 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றனர். போட்டி வழக்கம்பரை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## வல்லை பெண்கள் கல்லூரி

வல்வெட்டித்துறை, புதன்

வல்லை திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் கட்டப்பட்டு வரும் மகளிர் கல்லூரி அடுத்த தவணை ஆரமபத்தில் திறக்கப்படவிருக்கிறது. வல்வெட்டித்துறையில்முதன் முதலாகஆரம்பிக்கப்படவிருக்கும் மகளிர் கல்லூரி இது என்பது குறிப்பிடத்தக்கது.

## அர்ச் சூசையப்பர் திருநாள்

புதுக்குடியிருப்பு, புதன்

இம்மாதம் 22-ந் திகதி ஆரம்பமான முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு அர்ச் சூசையப்பர் திருநாள் அடுத்த மாதம் 2ந்திகதி காலைநடைபெறும் திருநாள் பாடற் பூசையுடன் நிறைவுறும்.

மென்பந்து கிரிக்கெட்

## யங்லயன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வியா

அரியாலை விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டு வரும் 'மென்பந்தாட்ட கிரிக்கெட் நொக்கவுட்' போட்டியில், யாழ்ப்பாணம் 'யங்லயன்ஸ்' விளையாட்டுக் கழகம், சுச்சமோட்டை 'வளர்மதி' விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதிக் கோஷ்டி மொத்தம் 49 ஓட்டங்களைப் பெற்றது. ஜு தி தயாசிங்கம் 21 ஓட்டங்களைப் பெற்ருர். யங்லயன்ஸ் வீரர் இம்மனுவேல் 9 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்திஞர்.

யங்லயன்ஸ் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 64 ஓட்டங்களைப் பெற்றது. லூயிஸ் 28 ஓட்டங்களைப் பெற்ருர்.

வளர்மதிக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 44 ஓட்டங்களைப் பெற்றது.

யங்லயன்ஸ் கழகம் 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட் நஷ்டத்துக்கு 36 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புரம் சிஜாசன் 18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார்.

ஆட்டமுடிவில், யங்லயன்ஸ் கழகம் 8 மேலதிக விக்கெட்டுகளால் வளர்மதிக் கழகத்தை வெற்றி பெற்று, இறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளது. (தே நி)


ஈழம் செல்வம் செழிக்க
லங்கெம் இரசாயனங்களைப் பாவியுங்கள்!

விவசாயிகளே! பொன்யுகத்தின் முன்னுடிகளாய், நம் நாட்டில் செல்வம் செழிக்க, வெங்காயமும், மிளகாயும் பயிரிடுக.
அறுவடை நன்கு பெற...அனைவரும் செல்வம் பெற...முதலடி இன்றே எடுங்கள்!

உங்கள் வெங்காய, மிளகாய்ச் செடிகளைத் தாக்கும் பூச்சி, புழுக்களையும், களையையும் அழிக்க, இலங்கையில் லங்கெம் ஸ்தாபனம் ஒன்று மட்டுமே களைக்கொல்லி, புழுப்பூச்சிக்கொல்லி ஆகியனவற்றையும், செடிவளர குரோ-மோ உரத்தையும் முழுமையாக அளிக்கிருர்கள்.

அசொட்ரீன் 60, சுமித்தியன், பிளனவின், மில்ட்ரெக்ஸ், குரோ-மோ உரம், டீ.டீ. நிலப் புகைப்படுத்தி ஆகியன லங்கெம் உற்பத்திகள். வெங்காயத்திற்கும், மிளகாய்க்கும் உகந்ததாக இவை தயாரிக்கப்படுகின்றன. ஈழம் செல்வம் செழிக்க, கூடிய வெங்காயமும், மிளகாயும் நாட்டுக!




குரோ-மோ உரம் மில்ட்ரெக்ஸ் அசொட்ரீன் 60, டீ.டீ. நிலப் புகைப்படுத்தி சுமித்தியன் பிளனவின் குரோ-மோ உரம்

லங்கெம் இலங்கை லிமிட்டெட் ... த.பெ. எண் 919 கொழும்பு டெலி. 28333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகையிரதப் பகுதி தமிழ்மன்றம்

கொழும்பு, புதன்

புகையிரதத் திணைக்களத்தின் நூல்நிலைய மண்டபத்தில் புகையிரதப் பகுதித் தமிழ் மன்றப் பொதுக்கூட்டம் திரு எஸ். கனகசபையின் தலைமையில் நடைபெற்றபோது புதிய உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. வி. நவரத்ன. உப-போஷகர்கள்: திருவாளர்கள் பி. ராஜகோபால், எஸ். பொல்லத்துரை, பி. வாதவூரர். தலைவர்: திரு எஸ் கனகசபை, உபதலைவர்கள்: எம் சுப்பிரமணியம்; வி. கே. கொன்ஸ்ரான்ரைன்.

பொதுச்செயலாளர்: திரு தி. சுந்தரலிங்கம், துணைச் செயலாளர்: திரு பி சுப்பிரமணியம், பொருளாளர்: திரு தி. குமாரசதாசிவம், துணைப்பொருளாளர்: திரு. கி. பாலசுப்பிரமணியம்.

நிருவாகசபை யொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

—...

## ச. ச. நிலைய உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், வியா

தொல்புரம் மத்திய சனசமூகநிலைய வாசிகசாலையின் நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

போஷகர்: திரு. ச முருகையா, தலைவர்: திரு சி. சிவப்பிரகாசம், உபதலைவர்; திரு, அ. சுகதேவர், காரியதரிசி: திரு. மு. சடாச்சரம், உபகாரியதரிசி. திரு. மா. சிதம்பரநாதன், தனாதிகாரி: திரு. யோ. பத்மானந்தன், உபதனாதிகாரி திரு. கி. நடராசா, பத்திராதிபர் திரு பொ விஷ்ணுமூர்த்தி, விளையாட்டு தலைவர்: திரு. க மாயவரசா நிலையப்பொறுப்பதிகாரி திரு. க. லோகேஸ்வரன், கணக்குப்பரிசோதகர் திரு. கா. சிவஞானம், கண்காணிப்பாளர் திருவாளர்கள் கா சின்னத்துரை, ஆ. கந்தசாமி, கலைக்குழுத்தலைவர் திரு. அ. சிவபாதம்.

நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்

———

## நிர்வாகிகள்

மாவிட்டபுரம், புதன்

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகள் தெரிவு திரு. சி. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு ச. முருகையா, தலைவர்: திரு. சி. சிவப்பிரகாசம், உபதலைவர்: திரு. அ. சுகதேவர், காரியதரிசி: திரு மு. சடாட்சரம், உபகாரியதரிசி: திரு மா. சிதம்பரநாதன், தனாதிகாரி: திரு. யோ. பத்மானந்தன், உபதனாதிகாரி: திரு. கி. நடராசா, பத்திராதிபர்; திரு பொ. விஷ்ணுமூர்த்தி விளையாட்டு தலைவர். க. மாயராசா. நிலையப்பொறுப்பதிகாரி: க. லோகேஸ்வரன். கணக்குப் பரிசோதகர்: க சிவஞானம், கண்காணிப்பாளர்கள்: கா சின்னத்துரை, ஆ. கந்தசாமி, கலைக்குழுத் தலைவர்: அ சிவபாதம்.

......

## விபத்து

குருநகர், புதன்

மண்டைதீவைச் சேர்ந்த க. வைபவராசா என்னும் 12 வயதுச் சிறுவன் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு அண்மையில் சைக்கிளில் செல்லும்போது கார் ஒன்றுடன் மோதுண்டதால் படுகாயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்

## கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

"தொழிலாளரைக் கொண்டு 12 மணித்தியாலம் கடமைகள் செய்விப்பதைத் தவிர்த்தல்வேண்டும் செய்விக்கவேண்டியவாறு செய்வித்தாலும் மேலதிக அவசியம் ஏற்பட்டால் அவ் திக நேரச் சம்பளம் அவர்களுக்கு வழங்கவேண்டும் என்று அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம் அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது.

தொழிலாளர் காலி இடங்களை நிரப்பி, லீவு நாட்களுக்குக் கடமையாற்றுவதற்கு மேலதிக ஊழியர்களை நியமிக்கவேண்டும் என்றும் அரசாங்க அதிபரைக் கோரியுள்ளது. ......

## நிலக்கடலை உற்பத்தி அதிகம்

யாழ்ப்பாணம், புதன்

நிலக்கடலை சாகுபடி இவ்வாண்டு முன்னையவருடங்களிலும் பார்க்க வெற்றியளித்துள்ளதாக யாழ் மாவட்ட விவசாய விரிவாக்க இலாகாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதத்துக்கு ஒரு முறை மழைபெய்தபடியாலும் நெல் விதைத்து அறுவடைசெய்யப்பட்ட கமங்களில் கமக்காரர்கள் நிலக்கடலையை அதிகம் செய்து கொண்டதாலும் இது சாத்தியமாகியுள்ளது

நிலக்கடலைச் செடியை பசளைக்குப் பாவிக்கவும் கால்நடை உணவுக்குப் பாவிக்கவும் பருப்பிலிருந்து பலவிதமான உணவுப் பண்டங்கள் செய்யவும் முடியுமென்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுளளது. மேட்டுநிலங்களில் நிலக்கடலை ஓங்கி வளர்ந்து கடலையின் விளைவும் அதிகமாகிறதென்றும் நிலக்கடலையின் பிரயோசனங்களை இந்தியாவில் மக்கள் அதிகம் பயன்படுத்துவதாகவும் இந்த மாகாணத்திலும் வருங்காலத்தில் இவ்வாண்டுபோல் சாகுபடிக்கு ஊக்கமளிக்க அரசாங்கம் வேண்டிய உதவிகளைச் செய்யஇருப்பதாகவும் விவசாய இலாகா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ......

## 'தியாகத்தலைவன்'

குருநகர், புதன்

அமரர் வன்னியசிங்கத்தின் தியாகசரித்திரத்தையும் அரசியல் வாழ்க்கையையும் சித்தரிக்கும் படம் ஒன்று இலங்கையில் தயாரிக்கப்படவிருக்கிறது. ஆரம்ப புகைப்படப் பிடிப்பு மே மாதஆரம்பத்தில் அச்சுவேலியில் திரு. வி. நடேசலிங்கம் ஜே பீ. தலைமையில் நடைபெற விருக்கின்றது இப்படத்துக்கு தியாகத் தலைவன் என்று பெயரிடப் படவிருக்கிறது.

......

## நினைவுதினத் தானம்

யாழ்ப்பாணம், வியாழன்

சர்வமத சங்க - பூரண சர்வோதய இயக்க ஸ்தாபகரான ஸ்ரீலஸ்ரீ நந்தகோபாலகிரி நினைவு தினத்தை யொட்டி மேற்படி சங்கத்தால் புங்குடுதீவிலுள்ள அறுபத்தொரு வறிய குடும்பங்களுக்கு இரண்டு கொத்து அரிசியும் ரூபா பத்துமாக தானம் வழங்கப்பட்டது. புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலில் இது நடை பெற்றது.

## மக்களுக்கு மருந்து

### மகாத்மாகாந்தி கருத்து

மகாத்மா காந்திக்கு இயற்கை வைத்தியத்தில் அதிக நம்பிக்கையுண்டு. தென்னாபிரிக்காவிலே மகாத்மாவின் துணைவியாரான கஸ்தூரிபாய்க்கு வயிற்றில் ஒரு கோளாறு ஏற்பட்டது. மாட்டிறைச்சி தேநீரைப் பருகவேண்டுமென்றும் இன்றேல் அந்த நோயைக் குணப்படுத்தமுடியாதென்றும் ஒரு டாக்டர் அறிவுறுத்தினர் துணைவியார் நோயால் பெரிதும் அவதிப்பட்டார். ஆனல் அவரும் துணைவியாரும் சுத்த சைவம் செத்தாலும் சரி மாமிச உணவு சாப்பிடுவதில்லை என்ற உறுதி கொண்டவர்கள். டாக்டரும் கைவிட்டுவிட்டார். ஓய்வு எடுத்துக்கொண்டதுடன் இயற்கை வைத்தியச் சிகிச்சை செய்ததில் அன்னை கஸ்தூரிபாய் குணமடைந்து விட்டார். இவ்விதம் இரண்டொரு அனுபவங்கள் மகாத்மாவுக்கு இயற்கை வைத்தியத்தில் நம்பிக்கையைப் பலப்படுத்திவிட்டது. அது முதல் இயற்கை வைத்திய முறையையே பின்பற்றிவந்தார்.

"இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு ஏற்ற முறையில், ஓர் இயற்கை வைத்திய முறையை வகுக்க நான் முயன்று வருகின்றேன்" என்று அவர் ஓர் இயற்கை வைத்திய நிபுணருக்கு ஒரு கடிதத்தில் தெரிவித்து மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: மண், நீர் ஒளி, காற்று, ஆகாசம் இவற்றின் மூலம் சிகிச்சை அளிப்பதைப் பற்றியே ஆராய்கின்றேன். எல்லாவித நோய்களுக்கும் மேலானதோர் மருந்து இதயத்திலிருந்து இறைவன் நாமத்தை, பெயரை உணர்ச்சியுடன் கூறுவது தான் ராமா அல்லது அல்லா என்ற பெயரை இதயபூர்வமாகக் கூறி அதற்கமைய இயற்கை நெறிகளைப் பின்பற்றினுல் பயன் நிச்சயமுண்டு. சிகிச்சையைவிட நோய் பரவாமல் தடுத்துக் கொள்ளுவதே சிறந்தது மனச்சுத்தம், உடல்சுத்தம் சூழ்நிலைசுத்தம் என்ற சுகாதாரச் சட்டப்படிவாழ்க்கை நடத்தவேண்டிய அவசியத்தை உணரவேண்டும்."

மேலைநாட்டு வைத்தியர்களைப் பற்றி ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கூறியதாவது: நாட்டுக்காக வைத்தியர்களும் விஞ்ஞானிகளும் என்னசெய்கிறார்கள் என்று அறியவிரும்புகிறேன். சில நோய்களுக்கான சிகிச்சை செயவதைப்பயில வெளிநாடுகளுக்குச் செல்லுகிறார்கள் பணம் சம்பாதிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொள்ளுகின்றனர். அவர்கள் அவ்வித நோக்கத்தைவிட்டு, கிராமங்களுக்குச்சென்று கிராமமக்களுக்கான முறையில் சிகிச்சை அளிக்கவேண்டும் மேலை நாட்டு மருந்துகளை நம்பி இராமல். கிராமங்களில் மருந்துகளை வளரும் மூலிகைகளைக் கொண்டே சிகிச்சை அளிக்கவேண்டும் மருந்து அளிப்பதைவிட சரியானவழியில் வாழும் முறையை அவர்கள் கிராம மக்களுக்குக் கற்பிக்கவேண்டும்."

......

## மாணவர் நலனில் ப. ச. சிரத்தை

பருத்தித்துறை, புதன்

நெல்லியடிப் பட்டினசபையின் நூலக ஆலோசனைக் குழு நேற்றுமுன்தினம்தனது முதல் கூட்டத்தை பட்டின சபைத் தலைவர் திரு. ச. வ. தேவசகாயம் தலைமையில் நடாத்தியபோது உயர்தர வகுப்பு மாணவரின் தேவைகளைப்பூர்த்தி செய்வதையே முதல்நோக்கமாகக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தது இதன்படி விலையுயர்ந்த பாடப்புத்தகங்களுட்படப் பல நூல்கள் உடனடியாக வாங்க வேண்டுமென்றும், வாசகர்களின் வசதிக்காக நூலகத்தில் குடிநீர் வசதியும், மலசல கூடவசதிகளும் செய்யப்படல் வேண்டுமென்றும் தீர்மானித்தது.

## 'உயர்கல்வி நிறுவனங்களுக்கு தனியமைச்சு வேண்டும்'

கோட்டை, புதன்

தொழில்நுட்பக் கல்லூரிகள் உட்பட உயர்கல்வி வழங்கும் நாட்டிலுள்ள சகல கல்வி நிறுவனங்களும் தனி அமைச் சொன்றின்கீழ் இயங்கவேண்டும்.

நாட்டிலுள்ள கல்விமான்கள் பலர் ஒன்று சேர்ந்து மேற்கண்டவாறுகோரும் தீர்மானமொன்றைக் கொண்டு வந்துள்ளனர்.

இத்தீர்மானத்தைத் தேசிய உயர்கல்விச்சபை தற்போது ஆராய்ந்து இங்கிலாந்து ஐக்கிய அமெரிக்கா, சோவியத்யூனியன் போன்ற முன்னேற்றமடைந்த நாடுகள் பலவற்றில் உயர்கல்வி பற்றி ஆராயவும் உயர்கல்வி வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தனி அமைச்சுகள் இயங்குகின்றன எனவும் மேற்படி தீர்மானத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

......

## பேராதனை பல்கலைக் கழகம் பிற்போடப்பட்டது

கோட்டை, புதன்

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் இக்கல்வி ஆண்டுக்கானவகுப்புக்கள் முன்பு அறிவித்த திகதியில் ஆரம்பிக்கப்பட மாட்டாதென்றும். ஆரம்பமாகும் திகதி பின்பு அறிவிக்கப்படுமெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இக்காலப் பகுதியில் பல்கலைக்கழக வளவினுள் எந்தமாணவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.


இதோ! ரோமியா பரவசமூட்டும் ஓர் புதிய பவுடர்!

பசுமையும் நீடிக்கும் சுகந்தமும் கொண்ட ரோமியா,
விசேஷ முறையில் வாசனையூட்டப்பட்ட டால்க்.
மேலோங்கும் அழகுருவளிக்க உடலெங்கும் முகத்திலும் ரோமியா தடவுக!




சிறப்பறிய, இன்றே ஒரு டின்
ரோமியா
வாங்குக!
எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
விலை. ரூ. 2/35




ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எப்போதும் பிறரைக்குறைகூறவேண்டாம் ஆக்க முறையைக்கடைப்பிடி. நீ சொல்லவேண்டியதைப் போதி. உனது கடமையில் தவறாதே. அதிலுடன் நின்றுவிடு.

—விவேகானந்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை மாதம் 16 - ந் திகதி ( 29 - 4 - 71)


## சுதந்திரத்துக்கு ஆபத்து

இன்று நம் இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை நமது அமைதிக்கு மட்டுமல்ல, ஜனநாயகத்துக்கும், சுதந்திரத்துக்குமே தோன்றியுள்ள பெரிய ஆபத்தாகும்.

பல நூற்றாண்டுகளாக நாம் மாற்றானுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தோம். பாரிசெய்த தவமோ எதிர்பாராத முறையில் நமக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்தது. கிடைத்தற்கரிய இந்த சுதந்திரத்தைப் பேணிக்காத்தாலே உலகில் நாம் மானத்துடனே தலை நிமிர்ந்துவாழ முடியும்.

ஆனால் துரதிருஷ்டவசமாக அரசியல் கட்சிப் போட்டிகளும், வகுப்புவாதமும் நாட்டிலே மக்களிடை ஒற்றுமையைக் குலைத்தன. வேலையில்லாப்பிரச்னை, வீடில்லாப் பிரச்னைபோன்ற தேசியப் பிரச்னைகளை தீர்க்கமுடியவில்லை. இதனால் ஜனநாயக முறையில் நம்பிக்கை இழந்த பல வாலிபர்கள் மனமுடைந்து பலாத்கார வழிகளில் பிரவேசித்து, நாட்டில் ஒருபெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நெருக்கடியைத் தீர்த்து அமைதிஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைமட்டுமல்ல, ஜனநாயகத்திலும், அமைதியான முறைகளிலும் நம்பிக்கைகொண்டவர்களும் நாம் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதிலும் கவலைகொண்டவர்களனைவரையுமே சேருமென்பதை விளக்கத் தேவையில்லை. நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விடின், கொந்தளிப்புகள் அதிகரித்து, மீண்டும்நாம் பிற நாடுகளுக்கு அடிமைப்பட நேரிட்டுவிடும். பலாத்காரவழியிலே நாம் சுதந்திரம் பெறவில்லை. அன்புவழியிலே, அமைதியான முறையிலே சுதந்திரத்தைப் பெற்றோம். குறைகளும் பிரச்னைகளும் அதிகம் இருக்கலாம். இவற்றையெல்லாம், அமைதியான வழியில் தீர்த்துக்கொள்வதே விவேகம். பொறுமை இழந்து, பலாத்கார வழியில் புகுவது தற்கொலையாவதுடன், மற்றவர்கள் மீண்டும் நம்மைஅடிமைப் படுத்தவும் நாம் சுதந்திரத்தை இழந்துவிடக் கூடியதாகவும் இருக்கும்.

இந்த நெருக்கடியைத் தீர்த்து, இங்கு நம் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள தேசிய அரசாங்கத்தை அமைக்கவேண்டியதைப்பற்றி இரு நாட்களுக்கு முன் இப் பத்திரியில் எழுதியிருந்தோம். அசாதாரண நிலைமைக்கு அசாதாரண சிகிச்சை தேவையாகும். பிறநாடுகளின் உதவியை வேண்டும் பிரதமர், முதலில் இந்நாட்டிலுள்ள எல்லா ஜனநாயகக் கட்சிகளின் உதவியையும் ஒத்துழைப்பையும் வேண்டிப்பெறவேண்டிய அவசியத்தை வலியுறுத்தத் தேவையில்லை. இந்த நெருக்கடியான சமயத்தில் பிரதமர் இவ்விதம் வேண்டுகோள் விடுத்தால் ஐக்கியதேசியக்கட்சி, தமிழரசுக்கட்சி உள்ளிட்டு எல்லாக்கட்சிகளும், அவ்விதம் ஒத்துழைக்க ஆவலுடன் முன்வருமென்றே நம்புகிறோம்.

அதிர்ஷ்டவசமாக தமிழ்ப் பகுதிகளில்இச்சமயம் அமைதி நிலவுகின்றது. காரணம் பொதுவாகத் தமிழ் மக்கள் அகிம்சா வழியில்நம்பிக்கைகொண்டவர்கள்மொழி உரிமைக்காகப்போராடியபோதும் அவர்கள் அகிம்சா நெறியையே பின்பற்றினரென்பது குறிப்பிடத்தக்கது. அவர்களது முக்கியகுறைகள் தீரவேண்டியிருப்பினும், இச்சமயம் அதையெல்லாம் மனதில் வைக்காமல், இன்றையதேசிய ஆபத்தை உணர்ந்து, பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், நாட்டின் பல பிரச்னைகளையும் அமைதியான முறைகளில் தீர்க்கவும், தமிழ் மக்கள் தங்கள் தேசியக் கடமையைச் செய்யத் தயங்கமாட்டார்கள்.

சுதந்திரத்துக்கே ஆபத்து ஏற்பட்டு அதை நாம் இழந்து விட்டால் பின் இந்த வாழ்வினால் என்னபயன்? ஒரு கட்சிக்கு எவ்வளவுதான் மெஜாரிட்டி பலம் இருப்பினும் சரி நாட்டிலே மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள எல்லாக் கட்சிகள், பிரதிநிதிகள் இவர்களது ஏகோபித்த ஒத்துழைப்புடன் கூடிய ஒரு தேசிய அரசாங்கமே, இன்றைய பிரச்னைகளை மட்டுமன்றி எதிர்கால பிரச்னைகளையும் தீர்க்கவும், நமது சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் அதிக பலமும் வாய்ப்புமுள்ளதாக இருக்கும். இதனால் பிரதமரின் பெரும் பளு குறைவதுடன், இன்றைய நெருக்கடியைச் சமாளிக்க பெரிதும் அவருக்கு உதவியாக இருக்கும்.

**மேயர் ஏற்பாடு**

### பால்மா விநியோகம்

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணத்தில் இதுவரைகாலமும் 6 மாதக் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டுவந்த பால்மாவை, ஒரு வயதுக் குழந்தைகளுக்கும் கொடுப்பதற்கான ஏற்பாட்டை மேயர் செய்திருப்பதாக ஜனுப் [illegible] தெரிவித்தார்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் நவீனமார்க்கெட் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மேற்குபக்க கட்டடவேலைகள் எல்லாம் முடிவடையும் நிலையையடைந்துள்ளன. ஆகஸ்ட் மாத இறுதியில் மேற்குப்பக்க கட்டடவேலைகள் பூர்த்தியடைந்து விடுமென மைற்ஸ்தாபன அதிபர் தெரிவித்தார்.

**பயங்கர வாதிகளின்**

# அரசாங்க அதிபர் ஓட்டம் பிடித்தாராம்

## முகமூடி மனிதர் ராணுவ பயிற்சி அளித்தார்

கோட்டை, புதன்

'பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மக்களுக்கு விடுத்த வேண்டுகோளின் பின்பும் சரணடையாமல் இருக்கும் பயங்கரவாதிகளை உடனடியாக சரணடையுமாறு அரசாங்கம் கேட்டுள்ளது

புத்தி பக்குவமடையாத இளைஞர்களுக்கு ஜனதா விமுக்தி பெரமுன என்ற இயக்கம் பொறுப்பானதும் தவறானதுமான தகவல்களையும், உயர் பதவிகள் அளிப்போம் என்ற ஆசை வார்த்தைகளையும் கூறிவந்திருக்கிறது. ஜனதா விமுக்தி என்ற பெயரையுடையஇந்த இயக்கம் சில வேளைகளில் ஜனதா விமுக்தி பெரமுன எனவும், மற்றோர் சமயம் 'ஜனதா அறமுன' எனவும் அழைக்கப்படுகின்றது. 'சேகுவேரா' என்ற பெயர், இந்த இயக்கத்தினர் வைத்த பெயரல்ல பத்திரிகைகள் இவர்களுக்குச் சூட்டிய பெயரே இது'

இவ்வாறு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்படும் செய்தியின் பின்னால் என்ற நிகழ்ச்சியில் தெரிவிக்கப் பட்டது.

மேலும் அதில் லத்தீன் அமெரிக்காவில் சமூக அரசியல் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சேகுவேரா கொரிலா முறையைக் கைக்கொண்டார். ஜனநாயகமும் சமாதான வாழ்வும் நடைபெறும் நாடுகளில்இவரது கொள்கைகள் ஏற்றதாக இருக்கவில்லை என்ற உண்மையை சேகுவேரா உணர்ந்திருந்தார். இலங்கையில் ஜனநாயகம் பலவீனமானதல்ல-ஆழமாக வேரூன்றியுள்ளது.

இந்த நாட்டில் ஜனநாயகம் மிளிர்வதால் ஜனதா விமுக்தி பெரமுன சட்ட ரீதியான எதிர்க்கட்சியாக தம்மைப் பிரகடனப்படுத்திச் செயல்பட முடியும் அப்படி இருக்கத்தக்கதாக இப்படி ஏன் அவர்கள் நடந்துகொள்கிறார்களோ?

உண்மையில்நாட்டிலுள்ள இளைஞர்கள்மீது அக்கறை இருக்குமானால் இளைஞர்கள் பிரச்னைகள்பற்றியும் நாட்டிலுள்ள மற்றும் பிரச்னைகள்பற்றியும்அவர்கள் ஓர் அரசியல் திட்டத்தை வெளியிட்டிருக்கலாம். அதன்மீது அவர்கள் தங்கள் செல்வாக்கைப் பெருக்கியிருக்கலாம். அவர்களிடத்தில் ஒற்றுமையான கொள்கை இல்லாமல் போனதால் அப்படிச்செய்ய முடியவில்லை.

புத்தி பக்குவமடையாத ஒருவர் புலமைப்பரிசில் பெற்று ஒரு நாட்டுக்குச் சென்றிருந்தார். அங்கு ஓர் அரசியல் முகாமில் சேர்ந்து கொள்ள முயற்சி செய்தார். அவர் புத்திபக்குவமடையாதவராக இருந்தமையால் அந்த இயக்கத்தில் அவர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.பின் அவர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மாணவர்களுக்குப் பொய்யான உறுதிமொழிகளைக் கொடுத்து அவ்விளைஞர் இயக்கத்தில் சேரமுயன்ற அவர் அதிலிருந்தும் பிரிந்து தனக்கொரு சொந்த முகாமை அமைத்துக்கொண்டார்.

[illegible] வதை அளித்தார். அவரும் பின் சரணடைந்துவிட்டார். இதன்பின் அவரது வாழ்வில் 2,3 வருடங்கள் சூன்யமாக இருந்தது. பின்பு பொய்யான தகவல்களைக்கூறி முகாம்களை அமைத்துக் கொண்டார். இந்த முகாம்களைச் சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளாமல் இருந்ததினால், ஒருபிரிவினர் மீது மற்றப் பிரிவினர் குற்றச்சாட்டும் பதில் குற்றச்சாட்டும் செலுத்தினர். முகாம்களில் விரிவுரை நிகழ்த்தியவர்கள் மற்ற இடங்களில் தயாரித்த விரிவுரையாளர்களை கிளிப்பிள்ளைபோல் வகுப்புகளில் ஒப்பித்தனர் இந்த வகுப்புகளில் எதிர் கருத்துச் சொல்லவோ எதிர் கேள்விகள் கேட்கவோ மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இவர்கள் மிகவும் பொய்யான செய்திகளை அவர்களுக்குக் கூறிவந்துள்ளனர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட இடதுசாரிகள்பற்றி பொய்யான செய்திகளை மாணவர்களுக்குத் தெரிவித்தனர். அதில் ஒன்று. 1927-ம் ஆண்டுநடைபெற்ற ராம்பண்டா வேலைநிறுத்தம் தோல்வி அடைந்ததற்கு இடதுசாரிகளே காரணம் என்று கூறியுள்ளனர் ஆனால் இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றபொழுது இடதுசாரிக் கட்சிகள் தோன்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட தலைவர் தன்னைச் சுயவிளம்பர மூலம் பிரபல்யப்படுத்த முயற்சி செய்தார். பிறநாட்டுப் பிரபல்யத்தலைவர்களைத் தான் சென்று சந்தித்ததாகவும் அவர் தெரிவித்தார். ஆனால் அவரால் குறிப்பிடப்பட்ட அந்தப் பிரபல்யத்தலைவர்களுக்கு அண்மையில் தானும் அவர் செல்லவில்லை.

இதனால் உள்ளூர்த் தலைவர்கள்தானும் இவரைநம்பவில்லை.

எல்பிட்டியாப் பகுதியில் அரசாங்க அதிபராகத் தம்மைத் தாமே நியமனஞ் செய்து கொண்டார். இந்த அரசாங்க அதிபர் இறுக்கமான கால்சட்டையும்முளந்தாழ் வரைக்குமான கோட்டும் அணிந்திருந்ததோடு சால்வை கால்வரையில் முடிந்து, ஒரு பக்கத்தில் பழைய வாள் ஒன்றையும் தொங்கவிட்டிருந்தார். இவர் தான் பிரயாணஞ் செய்ய ஒரு குதிரையைத் தேடினார். ஆனால் ஒரு கழுதைதானும் கிடைக்கவில்லை இவரை ராணுவம் துரத்தியபொழுது கையில் கிடைத்த சைக்கிளில் ஏறி ஓடியபொழுது கீழே விழுந்த வாளையும் எடுக்காது ஓடினார்.

நீதிபதி ஒருவரும் வழக்கு விசாரணை செய்வதற்கான மேல் முறையீட்டு நீதிபதி தண்டனை வழங்கும் நீதிபதி, காரியாதிகாரி ஆகிய சகல பதவிகளையும் ஒருவரே வகித்துவந்தார்.

இப்பொழுது அரசாங்கப் படையிடம் மகோலவைச் சேர்ந்த இளைஞர் கூறிய வாக்குமூலத்திலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த இளைஞர் அளித்த வாக்குமூலத்தில் இளைஞர்கள் கீழ்த்தரமான வேலைகள் செய்யவேண்டி இருந்தது நாங்கள் மிகவும் கஷ்டம் அனுபவிக்கும் பொழுது தலைவர்கள் மிகச் சிறப்பான வாழ்க்கை வாழ்ந்துவந்தனர். தலைவர்களுக்காக அழகான இளம் பெண்கள் காத்திருந்தனர். நாங்கள் முதலில் மகோ உணவுச்சாலையில் உணவருந்தினோம். இதன்பின் இராணுவத்தினர் வந்தனர் துப்பாக்கிப் பிரயோகத்தில் தலைவர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர்கள் சரணடைந்தனர். இவ்வாறு அந்த இளைஞர் தெரிவித்தார்.

இந்த இளைஞர்களுக்குமுகமூடி அணிந்த மனிதர்கள் இராணுவப் பயிற்சி அளித்தனர் இந்த இளைஞர்களிடம்வெற்றி உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

பிறநாடுகள் தமக்கு போர் விமானமும் தந்துதவுமென உறுதி அளிக்கப்பட்டது எனவும் தெரியவந்துள்ளது.

### உதவி நிதிக்கு 3,69,774 ரூபா

கோட்டை, புதன்

பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்குள்ளான அரசாங்க பாதுகாப்புப் படை, பொலிஸ் பகுதியினரின் நிவாரண நிதிக்கு இதுவரை 3 லட்சத்து 69 ஆயிரத்து 774 ரூபா 48 சதம் திறைசேரியில் சேர்ந்துள்ளது.

### வடபகுதிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருட்களை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள கொலன்னாவ எரிபொருள் நிலையத்திலிருந்து மண்ணெண்ணை, பெட்ரோல், ஆகியன கொண்டுவர வசதிகள் செய்யப்பட்டுள்ளன. என்றும் சீனி, மற்றும் உணவுப் பொருள் ஆகியனவும் கொண்டுவர எதுவித சிரமமும் ஏற்படாதவகையில் புத்தளம் அரசாங்க அதிபர் அரசாங்க இணைப்பு அதிகாரி வவுனியா அரசாங்க அதிபர் நொச்சிகாமம் பொலிஸ் அதிபர் ஆகியோர் வேண்டிய வசதியளித்துள்ளதாகவும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

### திருமண அழைப்பு

**துரைசிங்கம் — சிவசோதி**

நிகழும் 30-4-71-ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு 7-30—8-30-க்கும் இடையில் தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த கா. வேலுப்பிள்ளை தம்பதிகளின் மகன் திரு. துரைசிங்கத்திற்கும் (Inland Revenue Dept ) சுன்னாகம், மயிலணியைச் சேர்ந்த கு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை தம்பதிகளின் மகள் செல்வி சிவசோதிக்கும் (ஆசிரியை) திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 2777

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org